வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 418 of 2021

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கேசவராஜ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சதாசிவம் | தொழில் | : | உணவு பாதுகாப்பு அலுவலர் |
| கிராமம் | : | ஈரோடு மநாகராட்சி 2 | சமயம் | : | |
| தாலுக்கா | : | ஈரோடு | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.08.2024.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை: நாள்: 21.08.2024**

1. நான் தற்போது உணவு பாதுகாப்பு அலுவலராக ஈரோடு மநாகராட்சி 2ல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.06.2020 அன்று 23 NGR ரோடு, பல்லடம் என்ற முகவரியில் செயல்பட்டு வந்த அன்னை சூப்பர் மார்கெட் என்ற கடைக்கு ஆய்வுக்கு சென்று என்னை அங்கிருந்த கிருஸ்டோபர் பால்ராஜ், த/பெ.அந்தோனிபிச்சை என்பவரிடம் அறிமுகம் செய்துகொண்டு அந்த கடையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த வடகம் 2 கிலோ அளவில் உணவு மாதிரிக்கு வாங்கினேன்.

2. அதற்கான விலை கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டு அவற்றின் தரத்தில் சந்தேகம் இருப்பதாக கருதிய நான் படிவம் 5 ஏ இரண்டு பிரதிகள் தயாரித்து கடையின் உரிமையாளர் கிருஸ்டோபர் பால்ராஜ், த/பெ.அந்தோனிபிச்சை சாட்சிகள் முன்னிலையில் சார்வு செய்து ஒப்பம்

பெற்றுக்கொண்டேன். விலைக்கு வாங்கிய உணவு மாதிரி 4 சம பாகங்களாக பிரித்து ஒவ்வொன்றையும் தனித்தனியாக பழுப்பு நிறத்தாலான பேப்பர் மூலம் சுற்றப்பட்டு அதன் முனைகள் உள்புறமாக மடித்து ஒழுங்காக ஒட்டப்பட்டு வரிசை மற்றும் கோடு 24/027/493 மற்றும் 4/2020−2021 என்ற எண்ணில் பேக் செய்து அரக்கு சீல் வைக்கப்பட்டு உணவு பாதுகாப்பு தர சட்ட விதிகளுக்குட்பட்டு செயல்பட்டேன். அவ்வாறு எடுக்கப்பட்ட சேம்பலில் ஒன்றை உணவு பகுப்பாய்வகம், கிண்டிக்கு அனுப்பிவைத்தேன். NABL பகுப்பாய்வு கூடத்தில் பகுப்பாய்வு செய்துகொள்ள தாங்களுக்கு உரிமை உண்டு என்று விபரத்தினை எழுத்து மூலம் தெரிவித்தேன். அதற்கு அவர் விருப்பம் இல்லை என தெரிவித்துள்ளார். உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 பிரிவு 31 ன் கீழ் உரிமை பெறாமல் உணவு வணிகம் மேற்கொண்டதற்காக அறிவிப்பு வழங்கப்பட்டது.

3. பகுப்பாய்வு அறிக்கையானது மேற்படி வடகம் பாதுகாப்பற்றது மற்றும் தரம் குறைவான உணவு என்று அறிக்கை கிடைக்கப்பெற்றேன். பின்னிட்டு மேற்படி கிருஸ்டோபர் பால்ராஜ், த/பெ.அந்தோனிபிச்சை அவர்களுக்கு மேல் முறையீடு செய்வதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர் அந்த அறிக்கையின் மேல் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை. உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டத்தின்படி உரிமை பெறாமல் உணவு வணிகம் செய்துள்ளார். அதன்பிறகு உணவு பகுப்பாய்வு ஆணையரிடமிருந்து கிருஸ்டோபர் பால்ராஜ், த/பெ.அந்தோனிபிச்சை என்பவர் மீது வழக்கு தொடர எனக்கு அனுமதி கிடைத்ததால் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன்.

என்னுடைய தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1) 01.12.2011 ஆம் தேதியிட்ட உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் செய்ல முறைகள் **அ.சா.ஆ.1** ஆகவும்,

2) 20.04.2012 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.103, நாள் 20.04.2012 **அ.சா.ஆ.2** ஆகவும்,

3) 28.06.2018 ஆம் தேதியிட்ட உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களிடம் பணியிடம் மாறுதல் ஆணை **அ.சா.ஆ.3** ஆகவும்,

4) 25.06.2020 ஆம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சார்பு செய்யப்பட்ட படிவம் VA **அ.சா.ஆ.4** ஆகவும்,

5) 25.06.2020 ம் தேதியிட்ட ரொக்க ரசீது **அ.சா.ஆ.5** ஆகவும்,

6) 25.06.2020 ம் தேதியிட்ட ரெபரல் லேப்பில் பகுப்பாய்வு செய்ய விருப்பமின்மைக்கான கடிதம் **அ.சா.ஆ.6** ஆகவும்,

7) 25.06.2020 ஆம் தேதியிட்ட படிவம் VI **அ.சா.ஆ.7** ஆகவும்,

8) 25.06.2020 ம் தேதியிட்ட மாதிரி முத்திரை பதித்த படிவம் **அ.சா.ஆ.8** ஆகவும்,

9) 25.06.2020 ம் தேதியிட்ட நியமன அலுவலருக்கு கொடுத்த தகவல் கடிதம் **அ.சா.ஆ.9** ஆகவும்,

10) 26.06.2020 ம் தேதியிட்ட அஞ்சல் ரசீது **அ.சா.ஆ.10** ஆகவும்,

11) 25.06.2020 ஆம் தேதியிட்ட உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 பிரிவு 31 ன் படி வழங்கப்பட்ட அறிவிப்பு **அ.சா.ஆ.11** ஆகவும்,

12) 26.06.2020 ம் தேதியிட்ட நியமன அலுவலரிடமிருந்து பெற்ற ஒப்புகை **அ.சா.ஆ.12** ஆகவும்,

13) 06.07.2020 ம் தேதியிட்ட பகுப்பாய்வாளரின் காலதாமத தகவல் கடிதம் **அ.சா.ஆ.13** ஆகும்,

14) 19.10.2020 ம் தேதியிட்ட பகுப்பாய்வு அறிக்கை படிவம்–B **அ.சா.ஆ.14** ஆகவும்,

15) 28.10.2020 ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை படிவம் – B க்கான அஞ்சலக ரசீது மற்றும் ஒப்புகை

அட்டை **அ.சா.ஆ.15** ஆகவும்,

16) 05.11.2020 ஆம் தேதியிட்ட வழக்கு தொடர அனுமதி வேண்டி அனுப்பபட்ட கடிதம் **அ.சா.ஆ.16** ஆகவும்,

17) 26.04.2021 ம் தேதியிட்ட ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, அவர்கள் எழுத்து பூர்வ அனுமதி வழங்கிய கடிதம் **அ.சா.ஆ.17** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA
Digitally signed by K CHITHRA
Date: 2024.08.21 20:49:56 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்.